# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.77 of 2020

Deposition of DW.1

Name of the Witness: திரு.ராஜாமணி

Date : 25.02.2026

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

1) நான் M.A. Eng Literature, M.Ed படித்துள்ளேன். நான் அரசு ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். வாதி, 2ம் பிரதிவாதி என்னுடைய தம்பிகள். 3,4,10 பிரதிவாதிகள் என்னுடைய மகன்கள். என் அப்பா பெயர் வஜ்ஜிரவேல் முதலியார். என் அப்பாவிற்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவார். என் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள். நானும், வாதி மற்றும் 2ம் பிரதிவாதி என் அப்பாவின் 2ம் மனைவியின் பிள்ளைகள். என் அப்பாவின் முதல் மனைவி மூலமாக சுப்ரமணி, லட்சுமி என்று இருவர் இருக்கிறார்கள். என் அப்பாவிற்கு விவசாயம் தான் தொழில். தாவா சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் என் அப்பா சுயமாக சம்பாதித்தார். என் அப்பா விவசாயம் தவிர உப்பு வியாபாரம் செய்தார். மர அறுவை மில் வைத்திருந்தார் என்றால் நான் தான் வாதிக்காக வைத்து கொடுத்தேன். என் அப்பா வைத்திருக்கவில்லை. 1981–82 வாக்கில் வைத்து கொடுத்தேன். என் அப்பா பெயரில் தான் உரிமம் வாங்கப்பட்டது

. அந்த கடையில் இருந்த அனைத்து மின் இணைப்புகளும் என் அப்பா பெயரில் தான் இருந்தது. அந்த மில் 1994 வரை நடந்தது.

2) 1985ல் சொத்துக்கள் சம்மந்தமாக ஒரு இடைக்கால பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொண்டோம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் இடைக்கால பாக பிரிவினை பத்திரம் என்று குறிப்பிடப்படவில்லை. 1994ல் வாய்மொழியாக ஏற்பட்டதுதான் இறுதியான பாகபிரிவினை, அதனால் 1985ல் ஏற்பட்ட பாக பிரிவினை இடைக்கால பாக பிரிவினை என்று சொல்கிறேன். 1985 ல் ஏற்பட்ட இடைக்கால பாக பிரிவினை பத்திரம் ரத்து செய்யப்பட்டதா என்றால் ரத்து செய்யப்படவில்லை. 1985 பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரத்தை அனுசரித்து வாதியும் நானும் 2ம் பிரதிவாதி காந்தன், எனது பெரியம்மா மகன் சுப்ரமணியும் சொத்துக்களை அனுபவித்து வந்தோம் என்றால் நான், வாதி, 2ம் பிரதிவாதி ஒன்றாக அனுபவித்து வந்தோம். சொத்துக்களை ஒன்றாக அனுபவிப்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை, சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்படவில்லை. 1985 பாக பிரிவினை அடிப்படையில் அவரவர்கள் சொத்துக்களை அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்த பதிலுரையில் 1985ல் நடந்த பாக பிரிவினை பத்திரப்படி ஒன்றாக அனுபவித்து வந்ததாக சொல்லி உள்ளேனா என்றால் சொத்துக்கள் அவரவர்களுக்கு பத்திரம் ஏற்பட்டுவிட்டது, ஆனால் கூட்டாக அனுபவித்து வந்தோம். அந்த பத்திரப்படி தலா 1 ஏக்கர் பாகம் ஒதுக்கப்பட்டது

என்றால் சரிதான். அதன்படி தான் அனைவரும் சுவாதீனம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பாவிற்கு ஒரு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்.244/1. அதன்படி 79 சென்ட் ஒதுக்கப்பட்டது. அந்த பாக பிரிவினை பத்திரத்தில் என் அப்பாவின் காலத்திற்கு பிறகு யாருக்கு போய் சேர வேண்டும் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். பாக பிரிவினை பத்திரம் எழுதுவதற்கு முன்பாக என் அப்பா எனக்கு 10 சென்ட் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த நிலம் வீடு கட்டுவதற்காக என் அப்பா கிரயம் செய்து கொடுத்தார். ஏற்கனவே 10 சென்ட் நிலம் எனக்கு கிரயம் கொடுத்துவிட்டதால்தான் பாக பிரிவினை பத்திரத்தில் எனக்கு 90 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் தலா 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் நிலத்தின் இடத்திற்கு கிழக்கிற்கும் தெற்கிற்கும் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் அரூர்–கம்பைநல்லூர் தார் சாலைக்கு தெற்குபுரம் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பாக நிலத்திற்கு மேற்கு பக்கத்தில் வசித்து வருகிறோம். முதலில் மேற்கு பகுதியில் வாதி, அடுத்தார் போல் 2ம் பிரதிவாதி காந்தன், அதற்கு அடுத்தார் போல் கிழக்கு பக்கம் நான் உள்ளேன். என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில்தான் நாங்கள் மூவரும் குடியிருந்து வருகிறோம். என் அப்பா 01.11.1995ல் இறந்துவிட்டார். என் அப்பா இறந்தபின் அவருக்கு ஒதுக்கப்பட்ட 79

சென்ட் நிலத்திற்கு சுப்ரமணி பாகம் எதுவும் கேட்கவில்லை. பாகம் கேட்டு சுப்ரமணி என் அப்பாவிற்கு சட்ட அறிவிப்பு கொடுத்தார். நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

4) 1994ல் என் தந்தை பெயரில் இருந்த வீட்டு மனையை எனக்கு உயில் எழுதி வைத்திருந்தார். அதற்கு என் சகோதரர் சுப்ரமணி ஆட்சேபணை தெரிவித்து ஆக்கிரமிப்பு செய்தார். அதனால் நான் அவர் மீது வழக்கு போட்டேன். எந்த வருடம் வழக்கு போட்டேன் என்றால் சுமார் 2000வருடத்தில் தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன். அந்த வழக்கை சுப்ரமணிக்கு எதிராகவும் அவர் வாரிசுகளுக்கு எதிராகவும் போட்டேன். அந்த வழக்கை நானும் என் சகோதரர்களும் சேர்ந்து போட்டோம். அந்த வழக்கில் உயில்படி எனக்கு பாத்தியம் என்பதால் சுப்ரமணி வரக்கூடாது என்று வழக்கு போட்டோம். அந்த வழக்கில் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு பின் சுப்ரமணி எங்கள் சொத்திற்கு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 உயில்தான் அது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அனைவரும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பில் எனக்கு என்ன ஆதரவாக வந்ததோ அதை பொறுத்து நான் அனுபவிக்கிறேன். அதே போன்று வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் அந்த தீர்ப்பின் ஆதரவாக அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 OS.52/1998 வழக்கின் தீர்ப்பாணை என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் தாவா அ–அட்டவணை சொத்து

எனக்கும், பி–அட்டவணை சொத்து வாதிக்கும், சி–அட்டவணை சொத்து 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறானது. அந்த தீர்ப்பின் மேல் நான் மேல் முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. உயிலில் உள்ள சொத்து விவரம் அடிப்படையில்தான் நான் வழக்கு போட்டேன் என்றால் என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த வீட்டு மனை சொத்தின் அடிப்படையில்தான் வழக்கு போட்டேன். நான் தற்போது வழக்கிற்காக இவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு கிரயம் கொடுத்த 10 சென்ட்டிற்கு மட்டும் வழக்கு போட்டிருந்தால் வாதியையும் 2ம் பிரதிவாதியையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான்.

5) 19.04.1994ம் தேதியில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது. அந்த பாகத்தின்போது கம்பைநல்லூரில் அப்போதைய தலைவராக இருந்த பி.மாசிலாமணி, பழனிசாமி, குள்ளகாயன் என்ற சுப்ரமணி, தீர்த்தமலை என் பக்கத்து நிலத்துக்காரர், ஐஸ் பேக்டரி வேலாயுதம் இருந்தார்கள். அதில் வேலாயுதம் மட்டும் உயிருடன் இருக்கிறார். வாய்மொழி பாக பிரிவினையை அனுசரித்து சொத்துக்களின் சர்வே எண்கள் உட்பிரிவு செய்யப்பட்டது. அப்போது என் தந்தை சுயநினைவுடன்தான் இருந்தார். எல்லோருக்கும் பாகம் ஏற்பட்டு பட்டா கொடுக்கப்பட்டுவிட்டதால் என் அப்பா 1992ல் ஏற்பட்ட உயிலை ரத்து செய்யவில்லை. நான் 1998ல் சுப்ரமணிக்கு எதிராக போடப்பட்ட OS.52/1998

வழக்கில் 1994ல் வாய் மொழி பாக பிரிவினைப்படி பட்டா மூலமாக பாத்தியம் என்று குறிப்பிடாமல் ஏன் உயிலின் அடிப்படையில் பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் வாய்மொழி பாக பிரிவினையில் உயில் சொத்தே வரவில்லை. உயிலில் கண்டுள்ள சொத்திற்கும் வாய்மொழி பாக பிரிவினையில் உள்ள சொத்திற்கும் சம்மந்தம் கிடையாது.

6) உயில்படி வாதிக்கு பரிகாரம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் உயிலின் சொத்துக்கள் என் நிலத்தின் மீது ஊடுருவி செல்கிறது. வாதி பைனான்ஸ் தொழில் செய்கிறார். அவர் மனைவி ஆசிரியர் பணியில் இருக்கிறார். அவர் மனைவிக்கு நான்தான் செலவு செய்து வேலை வாங்கி கொடுத்தேன். வாதியும் 2ம் பிரதிவாதியும் விவசாயம் செய்து என்னை கஷ்ட பட்டு படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் எதுவும் தெரியாது என்பதால் நான் அவர்களை ஏமாற்றி என் மீது பட்டா வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு 1985ல் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரத்தில் ஒதுக்கப்பட்ட 79 சென்டில்தான் சா மில் உள்ளது என்றால் சரிதான். அந்த சா மில் இருக்கும் இடத்தில்தான் வாதி வீடு கட்டியுள்ளார் என்றால் வாதி என்னுடைய 10 சென்ட் நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளார். வாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் என் அப்பா எழுதி கொடுத்த உயில்படி அவருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.2 உயிலில் சர்வே எண்.244/1 புஞ்சை ஏக்கர் 0.79 தீர்வை 0.88 இதில் தாக்கு ஒன்றுக்கு செக்குபந்தி விவரம் மொரப்பூர் போகும் ரோட்டுக்கு தெற்கு ராாமி, காந்தன், கணேசன் இவர்கள் உயில் பாக நிலத்துக்கு வடக்கு ஆறுமுகம் நிலத்துக்கு மத்தியில் மொத்தம் 960 சதுர அடிகளில் அமைந்துள்ள மங்களூர் ஓடு போர்த்திய கதவு இல்லாத அறுப்புமில் ஒன்றும் மற்றும் அதனுள் அமைந்துள்ள அறுப்பு மிஷின் ஒன்றும் 15, 5, 1.5 HP குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் இரண்டும் மின் இணைப்பு எண். 467 இவைகளின் பூராபாத்தியமும், தாவா சர்வே எண் 2ம் தாக்கு செக்குபந்தி விவரம் கணேசன் உயில் பாக ஷாமில்லுக்கு கிழக்கு ராஜாமணி உயில் பாக வீட்டுக்கு மேற்கு கணேசன் உயில் பாக நிலத்துக்கு வடக்கு மொரப்பூர் ரோட்டுக்கு தெற்கு இதன் மத்தியில் 1014 சதுர அடியில் உள்ள மங்களூர் ஓடு போர்த்திய வீடு ஒன்றின் பூரா பாத்தியமும், மற்றும் 3 வது தாக்காக 22 செண்ட் நிலத்துக்கு கிழக்கு குப்பன் நிலத்துக்கு வடக்கு கணேசன் உயில் பாக ஷாமில்லுக்கு தெற்கு இதன் மத்தியில் பு.ஏக்கர் 0.22 செண்ட் நிலமும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு, 22 செண்ட் நிலம் என் நிலத்தின் மீது போகிறது. என் அப்பா உயிலில் எனக்கு நிலமே கொடுக்கவில்லை, வீட்டு மனை தான் எழுதி கொடுத்தார். என் அப்பா உயிலில் எனக்கு சர்வே எண். 244/1ல் 23 செண்ட் நிலம் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த உயிலே பொய்யானது, என் அப்பா உயிலே எழுதி கொடுக்கவில்லை. மேற்படி சர்வே எண்ணில் 244/1ல் 21 செண்ட் உயில்படி காந்தனுக்கும்

கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த உயிலை அனுசரித்து அவரவர்கள் பக்கத்து பக்கத்தில் வீடு கட்டி குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. அந்த உயிலே பொய்யானது. அந்த உயில் மூலம் வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் வந்த சொத்தினை நான் மோசடியாக என் பெயரை சேர்த்து கொண்டேன் என்றால் சரியல்ல. உயிலை மறைத்துவிட்டு மோசடியாக என் பெயரில் பட்டா ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. அந்த பட்டாவை அனுசரித்துதான் அந்த சொத்து எனக்கு வாய்மொழி பாகம் மூலமாக பாத்தியம் என்று பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழி பாக பிரிவினைக்கு பிறகுதான் அளந்து பட்டா, சிட்டா ஏற்பட்டது. எங்கள் குடும்பத்திற்குள் வாய்மொழி பாக பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நானும் கணேசனும் வாய்மொழி பாக பிரிவினையை அனுசரித்து பட்டா உற்பத்தி செய்ய வேண்டும் என்று மனுவில் கையெழுத்து போட்டு தாசில்தாரிடம் கொடுத்துள்ளோம். நான் பொய்யாக உரிமையே இல்லாமல் ஒரு ஏக்கர் 60 சென்ட் நிலத்திற்கு பட்டா வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கே அரசாங்கம் என்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்கியது.

8) என் அம்மாவிற்கு ரத்த புற்றுநோய் அவருக்குண்டான மருத்துவ செலவுகளை நான் தான் பார்த்தேன். என் அப்பா 1991–1997 வரை வாத நோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார், அவருக்கும் நான்தான் மருத்துவ செலவுகளை பார்த்தேன். வாதிக்கும் பிரதிவாதிக்கும் நான் தான் செலவு செய்து

திருமணம் செய்து வைத்தேன், அதனால் எனக்கு நிலம் சேர்த்து கொடுத்தார்கள். நான் அரசு வேலையில் இருந்ததால் நான் என் அப்பா அம்மாவை கவனிக்கவில்லை என்றாலும் வாதியும் 2ம் பிரதிவாதியும் தான் கவனித்தார்கள் என்றால் சரியல்ல. நான் வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் திருமணம் செய்து வைத்து பராமரித்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது)**

**Sd/Tmt.U.Monica, M.L.,**
**Additional District Judge,**
**Dharmapuri.**